# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.

**முன்னிலை : திருமதி.A. சுபஸ்ரீ L.L.M.,**

**( J.O.Code No.TN 02207)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆடி திங்கள் 8 ம் நாள்**

**அசல் வழக்கு எண்.20/2023**

**CNR No.TNTI07000032-2023**

1. ஜோசப்
2. பாபு ..வாதிகள்

..எதிர்..

1. சந்திரன்
2. ரமேஷ்
3. தனபால்
4. வசந்தகுமார்
5. சதீஸ்
6. ஜெயந்தி
7. கோகுல பிரசாத்
8. நாகஜோதி ..பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 02.07.2026 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 மற்றும் 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், 4 ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை என் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் வாதிகள் கட்டுமான பணிகளை மேற்கொள்வதை பிரதிவாதிகளோ, அவரது உறவினர்களோ, நண்பர்களோ முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யகூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**:–

**2.1** வாதிகள் கடந்த 2006ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை தாவா சொத்தில் வாடகைக்கு அவர்களது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள். 1ம் வாதி "New Life Mission Trust" என்ற அறக்கட்டளையின் நிறுவனர் ஆவார். அவரது நிறுவனத்தின் படி வாதிகள் வீட்டின் ஒரு பகுதியை ஜெபவீடாக கொண்டு வாரந்தோறும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறுகளில் மட்டும் பிராத்தனைகள் செய்து வந்தார்கள். பள்ளிபாளையம் பகுதியை சார்ந்த பலதரப்பட்ட மக்கள் மேற்படி ஜெபவீட்டிற்கு வந்து பிரார்த்தனைகளில் பங்கேற்று பயன்பெற்று வருகிறார்கள்.

**2.2** 1ம் வாதி அவரது “New Life Mission Trust” அறக்கட்டளையின் பெயரில் 2ம் வாதிக்கு கடந்த 07.03.2015ம் தேதியன்று ஜெபவீட்டின் மூலம் பிராத்தனை செய்து கொள்ள முறைப்படி கடிதம் வழங்கியுள்ளார். தாவா சொத்தில் 2015ம் ஆண்டிற்கு பிறகு 2ம் வாதி தொடர்ந்து அவரது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்.

**2.3** தாவா சொத்தினை 1ம் வாதி அவரது பெயரில் கடந்த 22.06.2016ம் தேதியன்று ஆவண எண்.7925/2016ன் படி கிரையம் பெற்றார். தாவா சொத்தானது வாதிகளுக்கு கிரைய வகையிலும், சுவாதீன அனுபவப்படியும் சுமார் 17 வருடங்களுக்கு மேலாக பத்தியப்பட்ட சொத்தாகும்.

**2.4** வாதிகள் தாவா சொத்தில் அவரது குடும்பத்துடன் கடந்த 17 ஆண்டுகளாக குடியிருந்து கொண்டு கிருஸ்த்துவ ஜெபவீட்டினை நடத்தி வந்தார்கள். மேலும், தாவா சொத்தினை கிரையம் பெற்ற 1ம் வாதி கடந்த 11.10.2013ம் தேதியன்று முறைப்படி D.T.C.P–யிற்கு ஊராட்சியின் மூலம் விண்ணப்பித்துள்ளார். வாதிகளின் இடம் உள்ள பகுதியில் யாருக்கும் D.T.C.P கொடுத்திட இயலாது என்று 9ம் பிரதிவாதி தெரிவித்துள்ளார். வாதிகள் அவர்களது வீட்டிற்கு முறைப்படி மின் இணைப்பு பெற்று பயன்படுத்தி வருகின்றனர்.

**2.5** வாதிகள் பல வருடங்களாக தாவா சொத்தில் அவர்களது குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு வாரத்தில் வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மட்டும் ஜெபவீடு நடத்தி வருவது 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும். இந்நிலையில், வாதிகளுக்கு கடந்த 17.11.2022 தேதியன்று திருப்பூர், வருவாய் கோட்டாச்சியரால் ந.க.எண்.5515/2022/அ1 என்ற எண்ணில் கடந்த 02.12.2022ம் தேதியன்று விசாரணைக்கு அழைத்தார்கள். அதனை ஏற்று 2ம் வாதி கடந்த 02.12.2022ம் தேதியன்று விசாரணைக்கு சென்றுள்ளார். விசாரணைக்கு பின்னிட்டு வருவாய் கோட்டாச்சியர் அவர்கள் 2ம் வாதியிடம் பாதுகாப்பான முறையில் ஜெபவீட்டினை நடத்திட அறிவுறுத்தினார். அதன்படி வருவாய் கோட்டாச்சியரிடம் மனு முடிக்கப்பட்டுவிட்டது.

**2.6** 1 முதல் 8 பிரதிவாதிகளின் ஒரு சிலர் வாதிகள் மீது கட்டாய மதமாற்றம் செய்வதாக முன்னுக்கு பின் முரணாக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் 2ம் வாதி காவல் நிலைய விசாரணைக்கு ஆஜரானார். மேலும், காவல் நிலைய விசாரணையில், வாதிகள் நடத்தி வரும் ஜெபவீட்டினை பொறுத்தளவில் பங்கேற்போர் அவர்களின் தனி விருப்பத்தின் பேரில் மனப்பூர்வமாக வருவதாகவும், யாருடைய தூண்டுதலோ, வற்புறுத்தலோ இல்லை என தெரிவித்தார்கள்.

**2.7** வாதிகள் தாவா சொத்தில் உள்ள பழைய வீடானது மிகவும் பழுதடைந்துள்ளதால் அவரது வீட்டினை அகற்றிவிட்டு மராமத்து பணிகள் செய்ய முயற்சி செய்தார்கள். அதன்படி கடந்த ஒரு மாத காலமாக தாவா சொத்தில் குழி தோண்டப்பட்டு பில்லர் அமைப்பதற்கான கட்டுமான பணிகள் நடந்து வந்தது. வாதிகள், 1 முதல் 8 பிரதிவாதிகளிடம் "ஏன் எனது வீட்டினை கட்டிடம் கட்ட பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1 முதல் 8 பிரதிவாதிகள் அனைவரும் வாதிகளை நீ இங்கு வீடு கட்டக்கூடாது, ஜெபவீடு நடத்திடவும் கூடாது என்று சொல்லி மிரட்டியுள்ளார்கள்." பின்னிட்டு வாதிகள் அருகில் உள்ளவர்களின் துணையுடன் பாதுகாப்பின் பேரில் தொடர்ந்து வீடு கட்ட முற்பட்ட போது 1 முதல் 8 பிரதிவாதிகள் மீண்டும் கட்டுமான பணியில் ஈடுபட்ட பணியாளர்களிடமும் பிரச்சனை செய்தார்கள்.

**2.8** எனவே, தாவா சொத்தில் வாதிகள் கட்டுமான பணிகளை மேற்கொள்வதை பிரதிவாதிகளோ, அவரது உறவினர்களோ, நண்பர்களோ முகவர்களோ எந்தவித இடையூறும் செய்யகூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1,2 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 3,6,7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

**3.1** வாதிகள் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், பொங்குபாளையம் கிராமம், க.ச.எண்.214 காலையில் பாரதியார் நகரில் அமையப்பட்டுள்ள வீட்டுமனை இடங்கள் பொதுமக்கள் அனைவரும்

மனையிடத்தை கிரையம் பெற்று வீடு கட்டி குடியிருந்து வருவதற்காக அமைக்கப்பட்ட ஒன்று. மேற்படி மனையிடங்களை கிரையம் பெற்றவர்கள் அனைவரும் அவரவர் இடத்தில் வீடு கட்டி அனைத்து சமூகத்தினம் எந்தவித பாகுபாடுமின்றி ஒன்றுமையுடன் வசித்து வருகின்றனர்.

**3.2** 1ம் வாதியும் வீட்டு மனையிடங்களை வாங்கி வீடு கட்டி குடியிருப்பதற்காக 2016ம் ஆண்டில் காலியிடமான கிரையம் பெற்றார். அதற்கு முன் மேற்படி மனையிடமானது ஒரு பழனியம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு மேற்படி பழனியம்மாள் அதை காலியிடமாக உபயோகித்து வந்துள்ளார். 1ம் வாதி மேற்படி மனையிடத்தினை வீடு கட்டி குடியிருக்க போவதாக கூறி காலியிடமாக கிரையம் பெற்றுள்ளார்.

**3.3** அதற்கு பின்னிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு சில மாதங்களுக்கு முன் மேற்படி இடத்தில் வாதிகள் ஓலை சாலை அமைத்து அதில் அனைத்து சமூகத்தினரும் அமைதியான முறையில் குடியிருந்து வரும் இடத்தில் ஜெபக்கூட்டம் நடத்தியும், மதமாற்றம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி வந்தார்கள். பொங்குபாளையம் கிராமம், மஜரா பள்ளிபாளையத்தில் குடியிருக்கும் அனைத்து பொது மக்களும் மேற்படி வாதிகளிடம் பொது மக்கள் அனைவரும் அமைதியான முறையில் குடியிருந்து வரும் இடத்தில் இவ்வாறு நீங்கள் ஜெபகூட்டம் நடத்துவது தவறு என்று கூறியும், வாதிகள் அதை பற்றி கவலை இல்லை இந்த குடியிருப்பு பகுதியில் தான் ஜெபகூட்டம் நடத்துவோம் அதை கேட்க யாருக்கும் உரிமையில்லை என்று கூறிவிட்டார்கள்.

**3.4** பொங்குபாளையம் கிராமத்தை சேர்ந்த பொது மக்கள் அனைவரும் பெருமாநல்லூர், காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் கொடுத்து மேற்படி

காவல்துறை அதிகாரிகள் மேற்படி வாதிகளை அழைத்து குடியிருப்பு பகுதியில் குடியிருக்க மட்டுமே அனுமதி உண்டு என்றும், ஜெபகூட்டம் நடத்தவும் மதமாற்றம் செய்யவும் எந்தவித உரிமையும் கிடையாது என்று அறிவுரை கூறி மேற்படி வாதிகளை அனுப்பி வைத்துவிட்டார்கள்.

**3.5** பின்னிட்டு வாதிகள் திருப்பூர், வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் பொய்யான சங்கதிகளை கூறி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் இருதரப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்து வாதிகளை ஜெபகூட்டம் நடத்த வேண்டுமென்றால் மனு செய்து ஊர் பொது மக்களின் ஆட்சேபனைகளை அறிந்து அனுமதி பெற்று நடத்த அறிவுரை செய்து மேற்படி மனுவினை முடித்து விட்டார்.

**3.6** தாவா தாக்கல் செய்வதற்கு சில வாரங்களுக்கு முன்பு மேற்படி வாதிகள் மீண்டும் தாவா சொத்தில் தற்காலிகமாக ஓலை சாலையில் ஜெபகூட்டம் நடத்த முற்பட்டார்கள். அதனை அறிந்த ஊர் பொது மக்கள் பெருமாநல்லூர், காவல் நிலையத்தில் மீண்டும் ஒரு புகாரை கொடுத்து உரிய அனுமதியின்றி நடத்திவரும் ஜெபகூட்டதினை நடத்தகூடாது என்று கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் மேற்படி பெருமாநல்லூர், காவல்துறை அதிகாரிகள் வாதிகளை அழைத்து சட்டத்திற்கு புறம்பாகவும், சட்ட விரோதமாகவும் இதுபோன்ற நடவடிக்கைகளில் இறங்கினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்று கூறியதன் அடிப்படையில் வாதிகள் முறையான அனுமதி பெற்று கட்டிடம் கட்டி ஜெபகூட்டம் நடத்திகொள்வதாக கூறியதன் அடிப்படையில் மேற்படி ஊர் பொது மக்களின் புகார் மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**3.7** வாதிகள் தாவா சொத்தான மனையிடத்தில் எந்தவித அனுமதியும் பெறாமல் ஜெபகூட்டம் நடத்தும் சர்ச் கட்டிடத்தினை கட்ட குழி தோண்டினார்கள்.

அனுமதியின்றி கட்டிடம் கட்ட முற்பட்டதால் பொங்குபாளையம், கிராம பஞ்சாயத்து தலைவர் அவர்கள் குடியிருப்பு பகுதியில் ஜெபகூட்டம், சர்ச் முதலியவை கட்டக்கூடாது என்றும், வீடு கட்டுவதாக இருந்தால் உரிய அனுமதியினை பெற்று கட்ட அறிவுறுத்தி மேற்படி வாதிகளின் சட்ட விரோதமான செயலை தடுத்து நிறுத்திவிட்டார். அதன் பின்னிட்டு குறுக்கு வழியில் பரிகாரம் தேட வேண்டி மேற்படி வாதிகள் பிரதிவாதிகளின் மீது பொய்யான வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகளால் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் தவறானது. வழக்கு உரிய தரப்பினர்களை சேர்க்காததால் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** **<u>வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன</u> :–**

| | |
|---|---|
| 1 | Whether the plaintiffs are entitled to the relief of permanent injunction as prayed for in the suit? |
| 2. | Whether the plaintiffs is in exclusive possession and enjoyment over the suit property? |
| 3. | To what further reliefs the parties are entitled to? |

**1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை XIV, விதி 5ன் கீழ் இன்று 27.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| 4. | Whether the suit property can be used as a prayer hall in a residential site? |

**5.** வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.** வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், வாதிகள் தாவா சொத்தில் வீடு கட்டுவதை பிரதிவாதிகள் இடையூறு செய்கிறார்கள் என்றும், தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வாதிகள் அதில் வாடகைதாரர்களாக சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள் என்றும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் வாதிகள் இருந்து வருவதற்கும், தாவா சொத்தின் உரிமை மூலத்திற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்குரை பரிகார பத்தியில் வீடு கட்டுவதற்காகத்தான் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தில் வாதிகள் சர்ச் கட்டுகிறார்கள் என்றும், மதமாற்றம் செய்கிறார்கள் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் தவறாக குறிப்பிடுகிறார்கள் என்றும், 1ம் வாதி "New Life Mission Trust" அறக்கட்டளையின் நிறுவனர் என்றும், 1ம் வாதியின் சகோதரியின் கணவர் 2ம் வாதி என்றும், அறக்கட்டளை மூலம் முறையாக அனுமதி பெற்று தாவா சொத்தில் இருந்த வீட்டின் ஒரு அறையில் ஜெப வீடு நடத்தப்பட்டதே தவிர மதமாற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்றும் வாதிட்டார்.

**7.** மேலும் அவரது வாதத்தில், தாவா சொத்து தனிப்பட்ட நபரின் பெயரில் கிரையம் பெற்றுள்ளதே தவிர சர்ச்சின் பெயரில் கிரையம் பெறப்படவில்லை என்றும், சர்ச் கட்டுவதாக இருந்தால் சர்ச்சின் பெயரிலேயே கிரையம் பெறவேண்டும் என்றும், மேலும் அதற்கு குறைந்தபட்சம் 0.22 செண்ட் இடம் தேவைப்படும் என்றும், தாவா சொத்தில் வீடு கட்டுவதற்காக தான் வாதிகள் கிரையம் பெற்றார்கள் என்பதையும், அவ்வாறு வீடு கட்டுவதற்கு பி.வா.சா.1ற்கு ஆட்சேபனை இல்லை என்பதையும் பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வாதிகள் கிருஸ்தவர்கள் என்பதால் அவர்கள் அங்கு வீடு கட்டக்கூடாது என்று இடையூறு செய்கிறார்கள் என்றும், தாவா சொத்திற்கும் திருமுருகன்பூண்டிக்கும் தொடர்பு இல்லாத நிலையில், வாதிகளை திருமுருகன்பூண்டியை சேர்ந்தவர்கள் தடுத்ததாக பி.வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 1ம் வாதி குடியிருப்பதற்காக தான் தாவா

சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதாலும், தாவா சொத்தில் 1ம் வாதி குடியிருப்பதற்காக வீடு மட்டும் தான் கட்டுகிறார் என்பதாலும், அதற்கு பி.வா.சா.1 ஆட்சேபனை இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாலும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று வாதிட்டு, எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் **மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம்** C.Joseph Vs The District Collector, Coimbatore & others., **வழக்கிலும். மாண்புமிகு சட்டீஸ்கர் உயர்நீதிமன்றம்** WPC. No.1281/2026 **மனுவிலும் மற்றும், மாநில மனித உரிமைகள் ஆவணயம்** SHRC. Case No.12823/2019 வழங்கிய உத்தரவு ஆகியவற்றை தாக்கல் செய்தார்.

**8.** பிரதிவாதிகள் தரப்பில் எழுத்துபூர்வமான வாதுரை மற்றும் **மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம்** CDJ 2025 MHC 3637 **மற்றும்** T.Wilson Vs The District Kanyakumari, & others., வழக்கில் வழங்கிய முன்தீர்ப்புக்களை தாக்கல் செய்துள்ளார்.

**9. தீர்வு:**

**எழுவினா 1,2 :-**

| | |
|---|---|
| 1 | Whether the plaintiffs are entitled to the relief of permanent injunction as prayed for in the suit? |
| 2. | Whether the plaintiffs is in exclusive possession and enjoyment over the suit property? |

**கூடுதல் எழுவினா 4: –**

| | |
|---|---|
| 4. | Whether the suit property can by used as a prayer hall in a residential site? |

**9.1** வாதிகள் 2006ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை தாவாசொத்தில் அவர்களது குடும்பத்துடன் வாடகைக்கு குடியிருந்து வந்ததாகவும், தாவா சொத்தில் உள்ள வீட்டின் ஒரு பகுதியில் ஜெபவீடாக கொண்டு வாரந்தோறும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் பிராத்தனை செய்து கொள்ள 1ம் வாதியின் “New

Life Mission Trust” அறக்கட்டளை மூலம் 2ம் வாதிக்கு முறைப்படி கடிதம் கொடுக்கப்பட்டதாகவும், பின்னிட்டு 1ம் வாதி கடந்த 22.06.2016 ம் தேதியன்று தாவா சொத்தை கிரையம் பெற்றதாகவும், அதன்படி வாதிகள் கடந்த 17 வருடங்களுக்கும் மேலாக தாவா சொத்தில் குடியிருந்து கொண்டு கிருஸ்துவ ஜெபவீட்டினை நடத்தி வந்ததாகவும், தாவா சொத்தில் வீடு கட்ட வேண்டி 1ம் வாதி 11.10.2018 ம் தேதியன்று D.T.C.P ன் அங்கீகாரம் வேண்டி விண்ணப்பித்ததாகவும், தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் யாருக்கும் D.T.C.P அங்கீகாரம் கொடுத்திட இயலாது என்று பொங்குபாளையம் ஊராட்சி மன்றத்தில் தெரிவித்ததாகவும், தாவா சொத்தில் உள்ள வீடு சிதிலமடைந்திருந்ததால் அதனை அகற்றி விட்டு மராமத்து பணிகள் செய்திட வேண்டி வாதிகள் கட்டுமான பணிகள் மேற்கொண்ட போது, தாவா சொத்தில் வீடு கட்டி, ஜெபவீடு நடத்தக்கூடாது என்று பிரதிவாதிகள் இடையூறு செய்வதாகவும் வாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.2** பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்து மனையிடங்களாக பிரிக்கப்பட்டு வீடு கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒன்று என்றும், தாவா சொத்தில் வீட்டை தவிர மதக்கூடமோ, பிரார்த்தனை கூடமோ கட்டக்கூடாது என்றும், 2016 ம் ஆண்டு தாவா சொத்தை கிரையம் பெற்ற வாதிகள் 2022 ம் ஆண்டு வரை எவ்வித பிரச்சனையும் இல்லாமல் இருந்து வந்ததாகவும், அதன் பிறகு தாவா சொத்தில் ஜெபகூட்டம் நடத்த பல்வேறு இடங்களில் இருந்து ஆட்களை கொண்டு வந்து அவர்களை கட்டாயமாக மதமாற்றம் செய்ய முயற்சித்ததாகவும், வீட்டு மனைகள் உள்ள இடத்தில் ஜெபக்கூடம் அமைக்கக்கூடாது என்று பிரதிவாதிகள் தெரிவித்தும் அதனை வாதிகள் கேட்கவில்லை என்றும், அதனால் அந்த பகுதியை சேர்ந்த நபர்கள் சேர்ந்து 19.12.2022 ம் தேதியன்று திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் வாதிகள் மீது புகார் கொடுத்ததாகவும், அதன்படி திருப்பூர், வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் விசாரணை நடத்தி, வீட்டை தவிர வேறு கட்டிடத்தை உரிய அனுமதி

இல்லாமல் கட்டக்கூடாது என அறிவுறுத்தி அனுப்பியதாகவும், பின்னிட்டும் வாதிகள் தாவா சொத்தில் ஜெபகூட்டம் நடத்த முயற்சித்ததால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாகவும் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.3** தாவா சொத்து கடந்த 22.06.2016ம் தேதியிட்ட வா.சா.ஆ.12 கிரைய ஆவணப்படி 1ம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**9.4** வாதிகள் கோரியுள்ள பரிகாரம் குறித்து, வா.சா.1 சாட்சியத்தை பரிசீலிக்கும்போது,

> " **தாவா சொத்து குடியிருப்பு பகுதி என்பதால் அனுமதி இல்லாமல் அங்கு சர்ச் கட்ட வேண்டும் என்று நாங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஜெபம் செய்வதற்காக ஜெப வீடு கட்டுகிறோம். சர்ச்சோ அல்லது வேறு வழிபாட்டு தலங்களோ தாவா சொத்தில் கட்ட வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி வாங்கி தான் கட்ட முடியும் என்றால் நாங்கள் சர்ச் கட்டவில்லை ஜெபவீடு தான் கட்டுகிறோம். நாங்கள் வழிபாடு செய்வதற்காகத்தான் அதனை கட்டுகிறோம் என்றால் அதில் குடியிருந்து கொண்டு எங்களை தேடி வருபவர்களுக்காக பிரார்த்தனை செய்வதற்காக கட்டுகிறோம். அவ்வாறு செய்வதற்கு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் பெரிய ஆலயம் கட்டுவதற்கு தான் அனுமதி வாங்க வேண்டும். இவ்வாறு சிறிய அளவில் பண்ணுவதற்கு அனுமதி வாங்க வேண்டியதில்லை."**

என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து, வாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து கொண்டு கிருஸ்துவ ஜெபவீட்டினை நடத்த வேண்டியே கட்டிடம் கட்ட முயற்சி செய்வது தெரிய வருகிறது.

**9.5** தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்து கொண்டு ஜெபவீடு நடத்த வேண்டி கட்டிடம் கட்ட முயற்சித்ததாக வாதிகள் வழக்குரையிலும், சாட்சியத்திலும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறு, 1ம் வாதி தாவா சொத்தில் வீடு கட்டுவதற்கோ அல்லது ஜெப வீடு கட்டுவதற்கோ, 1997ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து கட்டிட விதிகளின்படி உள்ளாட்சி அமைப்புகளிடம் முறைப்படி அனுமதி பெற்று அதன் பிறகே கட்டிட பணிகளை மேற்கொள்ள இயலும். ஆனால், தாவா சொத்து அமைந்துள்ள பொங்குபாளையம் கிராமத்தின் ஊராட்சி தலைவர் அவர்கள், வாதிகள் தாவா சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கோ அல்லது கிருஸ்துவ ஆலயம் கட்டுவதற்கோ மேற்படி ஊராட்சி மன்றத்தில் எவ்வித அனுமதியும் வாங்கவில்லை என்று பி.வா.சா.ஆ.3 சான்றிதழை வழங்கியுள்ளார். மேலும், தாவா சொத்தில் வாதிகள் கட்ட இருக்கும் கட்டிடத்தின் வரைபடமான வா.சா.ஆ.13 லும் கட்டிட அனுமதி எண் குறிப்பிடப்படவில்லை.

**9.6** வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை பத்தி 8ல், 1ம் வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற பிறகு D.T.C.P க்கு கடந்த 11.10.2018ம் தேதியன்று வா.சா.ஆ.4ன் மூலம் விண்ணப்பித்ததாகவும், ஆனால் தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் யாருக்கும் D.T.C.P கொடுத்திட இயலாது என்று பொங்குபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் தெரிவித்ததாக மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதுகுறித்து ஆவணத்தை இவ்வழக்கு விசாரணையில் தாக்கல் செய்யவில்லை.

**9.7** பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள **மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம்** T.Wilson Vs The District Kanyakumari, & others., **மற்றும்** CDJ 2025 MHC 3637 ஆகிய வழக்குகளில், ஜெபவீடு நடத்துவதற்கு சட்டப்படி உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற்ற பிறகே அவ்வாறு ஜெபவீட்டில் பிரார்த்தனை கூட்டம் நடத்த இயலும் என்று தெரிவித்துள்ளது. ஆனால், இவ்வழக்கில் வாதிகள்

இருவரும் தாவா சொத்தில் வீடு கட்டுவதற்கும் உள்ளாட்சி அமைப்பிடம் சட்டப்படி முறையாக அனுமதி பெறவில்லை. அதேபோல் தாவா சொத்தில் ஜெபவீடு கட்டி பிரார்த்தனை கூட்டம் நடத்துவதற்கும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் சட்டப்படி முறையாக அனுமதி பெறவில்லை.

**9.8** மேலும், வாதிகள் பொங்குபாளையம் ஊராட்சி மன்ற தலைவரையும் 9ம் பிரதிவாதியாக இவ்வழக்கில் சேர்த்து விட்டு, பிறகு இவ்வழக்கை கோப்பிற்கு எடுப்பதற்கு முன்பே அவரை வாதிகள் இவ்வழக்கில் இருந்து நீக்கியுள்ளார்கள். உண்மையில், வாதிகள் கூறுவது போல், தாவா சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு பொங்குபாளையம் ஊராட்சி மன்றத்தை சட்டப்படி அவர்கள் நாடியிருந்து, அவர்களது மனு திருப்பப்பட்டிருந்தால் அது குறித்து உரிய சட்ட நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டிருப்பார்கள். அவ்வாறு இல்லாமல் தாவா சொத்தில் உள்ளாட்சி அமைப்பிடம் அனுமதி பெற்று சட்டப்படி கட்டிடம் கட்ட முயற்சிக்காமலும், அதேபோல் திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் முறைப்படி அனுமதி பெற்று தாவா சொத்தில் ஜெபகூட்டம் நடத்த முயற்சிக்காமலும் அதற்கான பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதேபோல் 1ம் வாதியின் “New Life Mission Trust” மூலம் 2ம் வாதிக்கு ஜெபவீடு நடத்துவதற்கு வா.சா.ஆ.11 அனுமதி வழங்கப்பட்டுள்ளது சட்டப்படியானது அல்ல.

**9.9** தாவா சொத்தில் வாதிகள் ஜெபவீடு நடத்துவது குறித்து அங்கு உள்ள பொது மக்களுக்கும், வாதிகளுக்கும் பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பொங்குபாளையம் கிராம பொதுமக்கள் கொடுத்துள்ள மனுவின் மீது வழங்கப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ரசீது மற்றும் பெருமாநல்லூர், காவல் நிலையத்தில் 2ம் வாதிக்கு எதிராக 1ம் பிரதிவாதி கொடுத்த புகாரின் மீது வழங்கப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 மனு ரசீது ஆகியவை மூலம் தெரியவரும் நிலையில், சட்டப்படி உள்ளாட்சி அமைப்பிடம் அனுமதி பெற்று தாவா

சொத்தில் கட்டிடம் கட்டி, முறைப்படி திருப்பூர், மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்று தாவா சொத்தில் ஜெபவீடு நடத்தாமல் மேற்படி சட்ட விதிகளுக்கு முரணாக வாதிகள் இவ்வழக்கின் மூலம் பரிகாரம் தேடுவது ஏற்கத்தக்கதல்ல. எனவே, தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் வாதிகள் இருந்தாலும், சட்டத்திற்கு புறம்பாக அதில் அவர்கள் கட்டிடம் கட்ட இயலாது என்பதால், வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து அவ்வாறே, எழுவினா 1 மற்றும் 2 ற்கும், வாதிகள் திருப்பூர், மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் அனுமதி பெறாமல் தாவா சொத்தில் ஜெபகூட்டம் நடத்தக்கூடாது என்று எழுவினா 4 ற்கும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**<u>எழுவினா 3</u>:**

| | |
|---|---|
| 3. | To what further reliefs the parties are entitled to? |

**9.9** வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1ற்கு தீர்வு கண்டதின் அடிப்படையில் வாதிகளுக்கு வேறெந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**முடிவில்**,

(i) வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து, தாவாவை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

(ii) செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 24 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.24 18:37:17 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:-**

| | |
|---|---|
| வா.சா.1 | பாபு |
| வா.சா.2 | ஜோசப் |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | 2 ம் வாதியின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| வா.சா.ஆ.2 | - | 2 ம் வாதியின் ஸ்மார்ட் அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| வா.சா.ஆ.3 | 24.01.2023 | 01.01.2015 முதல் 23.01.2023 வரை உள்ள வில்லங்க சான்றிதழ் | கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | 11.10.2018 | 1 ம் வாதி D.T.C.P க்கு அனுப்பிய மனு | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 14.11.2022 | 1 ம் வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.6 | 14.11.2022 | 1 ம் வாதி பெயரிலுள்ள தண்ணீர் வரி ரசீது | அசல் |
| வா.சா.ஆ.7 | - | மின்கட்டண ரசீது | அசல் |
| வா.சா.ஆ.8 | 17.11.2022 | திருப்பூர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து 2 ம் வாதிக்கு வந்த அழைப்பாணை | அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.9 | 18.08.2021 | பட்டா எண்.159 க்குரிய சிட்டா | கணிணி நகல் |
| வா.சா.ஆ.10 | 24.01.2023 | வாதி, பிரதிவாதிகளுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.11 | 07.03.2015 | அறக்கட்டளையின் சார்பில் வாதிக்கு வந்த கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.12 | 22.06.2016 | வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.13 | – | பொறியாளர் வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ.14 | – | பாரதிய சாஷ்சிய அதினியம், பிரிவு 63 ன் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்களுடன் கூடிய புகைப்படங்கள் (5 எண்ணிக்கை ) | அசல் |
| வா.சா.ஆ.15 | 20.01.2015 | டிரஸ்ட் டீடு | சான்றிட்ட நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>:–**

பி.வா.சா.1 – சந்திரன்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | – | ஒப்புகை ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.2 | – | மனு ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.3 | – | பொங்குபாளையம் பஞ்சாயத்து தலைவர் வழங்கிய ரசீது | அசல் |

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.24 18:37:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

**தீர்ப்புரை அசல்/வரைவு**
அ.வ.எண்.20/2023
24.07.2026
கூ.மா.உ.நீதிமன்றம்
திருப்பூர்.